



# தமிழ் மக்கள் குரல்

தினசரி காலை நாளிதழ்

tamilmakkalkurall@gmail.com

RNI No. : TNTAM24840

உள்ளது உள்ளபடி






மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | புதன், செப்டம்பர் 02, 2026 | இதழ் 142


## ரூ.2 ஆயிரம் கோடி முதலீடுகள் ஈர்க்க இலக்கு; காஞ்சிபுரம் மாவட்டத்தில் ரூ.175 கோடியில் செமிகண்டக்டர், மின்னணுவியல் உற்பத்தி பூங்கா: சட்டசபையில் முதல்வர் விஜய் அறிவிப்பு

சென்னை, 02 செப்டம்பர் 2026: காஞ்சிபுரம் மாவட்டத்தில் ரூ.175 கோடியில் செமிகண்டக்டர், மின்னணுவியல் உற்பத்திப் பூங்கா அமைக்கப்படும். கோவையில் டிஜிட்டல் நிதி மையம், திருச்சி மண்டலத்தில் பல்முனை சரக்குப் போக்குவரத்து மையம் அமைக்கப்படும் என்று சட்டசபையில் முதல்வர் விஜய் அறிவித்துள்ளார்.

தமிழ்நாடு சட்டப் பேரவையில் 110 விதியின் கீழ், முதல்வர் விஜய் நேற்று வெளியிட்ட அறிவிப்பு: தமிழ்நாட்டில் செமி கண்டக்டர் துறையில் அதிக அளவு முதலீட்டினை ஈர்க்கவும், இத்துறையில் நமது மாநிலத்தின் பங்கினை கணிசமான அளவு உயர்த்திடவும், காஞ்சிபுரம் மாவட்டம், மதுரமங்கலத்தில் செமி கண்டக்டர் அண்ட் எலக்ட்ரானிக்ஸ் மேனுபேக்சரிங், 175 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிப்காட் நிறுவனம் மூலம் அமைக்கப்படும்.

இப்பூங்காவில், செமி கண்டக்டர் துறையில் புதிய தொழிற்சாலைகள் அமைப்பதற்கு ஏதுவாக உலகத்தரம் வாய்ந்த, ஆர்&டி-ரிசர்ஜ் அண்ட் டவுலப்மெண்ட் வசதிகள் ஏற்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் இத்துறையில் சுமார் இரண்டாயிரம் கோடி ரூபாய் வரை முதலீடுகள் ஈர்க்கப்படும். மேலும், சுமார் 5,000 பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகள் உருவாகும். நிதித் தொழில்நுட்ப புதுமைகளுடன் டிஜிட்டல் நிதிச் சேவைகளை உருவாக்கும் நோக்கில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மூலம் கோயம்புத்தூரில் டிஜிட்டல் நிதி மையம் பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

உலகத் தரத்திலான வசதிகள், அலுவலக இடங்கள், புத்தொழில் நிறுவனங்கள், நவீன ஆய்வகங்கள், பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு போன்ற அதிநவீன வசதிகள் இம்மையத்தில் இடம்பெறும். இதன் மூலம், கோயம்புத்தூர் மாவட்டத்தில், நிதி மற்றும் நிதிநுட்பத் துறையில் உலகளாவிய முதலீடுகளை ஈர்க்கவும், நவீன தொழில்நுட்பங்களை ஊக்குவிக்கவும், உயர்தர வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் இத்திட்டத்தில் வழிவகை செய்யப்படும். 2026-27ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டில் முக்கிய இடங்களில் பல்முனை சரக்கு போக்குவரத்து பூங்காக்கள், உலர் துறைமுகங்கள் அமைத்து முதலீட்டை ஈர்க்க அரசு முயற்சிக்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.




அதன் ஒரு பகுதியாக தமிழ்நாட்டின் மத்தியப் பகுதியில் அமைந்துள்ள திருச்சி மற்றும் அதன் அருகில் அமைந்துள்ள மாவட்டப் பகுதிகளில் முக்கிய உற்பத்தித் தொழிற்சாலைகள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அதிகளவில் உள்ளதால், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மூலம் ஆய்வு மேற்கொண்டு, திட்ட அறிக்கை தயார்செய்து அதன் அடிப்படையில் திருச்சிராப்பள்ளி மண்டலத்தில் பல்முனை சரக்கு போக்குவரத்து மையம் ஒன்று அமைக்கப்படும். இவ்வாறு அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

## தடைகளை எல்லாம் உடைத்தெறிந்து நாட்டின் பொருளாதார வளர்ச்சி 7.8% ஆக உயர்வு: பிரதமர் மோடி பெருமிதம்

சென்னை 02, செப்டம்பர் 2026: நாட்டின் ஒட்டுமொத்த கூட்டு வலிமையால் நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் பொருளாதார வளர்ச்சி 7.8 சதவீதமாக உயர்ந்து சாதனை படைத்துள்ளதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். உலகம் முழுவதும் போர் பதற்றங்கள், சர்வதேச நெருக்கடிகள் மற்றும் வர்த்தக விநியோகச் சங்கிலி பாதிப்புகளால் உலக நாடுகள் பொருளாதார ரீதியாக பெரும் சவால்களை சந்தித்து வந்தன. இந்த இக்கட்டான சூழ்நிலைகளுக்கு மத்தியிலும், நடப்பு 2026-27ம் நிதியாண்டின் ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான முதல் காலாண்டில் இந்தியாவின் மொத்த உள் நாட்டு உற்பத்தி (ஜிடிபி) 7.8 சதவீதமாக அபார வளர்ச்சி அடைந்துள்ளது.



இது தொடர்பாக பிரதமர் மோடி வெளியிட்ட வீடியோ பதிவில், '7.8 சதவீத பொருளாதார வளர்ச்சி விகிதம் நாடு முழுவதும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. நாட்டு மக்களின் அசைக்க முடியாத உறுதிக்கும், உழைப்பிற்கும் கிடைத்த இந்த வெற்றி நமது கூட்டு வலிமையை வெளிப்படுத்துகிறது. 2020ம் ஆண்டு கொரோனா காலத்திற்குப் பிறகு உலகெங்கும் பொருளாதார ஸ்திரத்தன்மை கேள்விக்குறியாகியுள்ள நிலையில், இந்தியாவிற்குள் சிலர் அவநம்பிக்கையை விதைத்து தொடர் பொய்களைப் பரப்பி வருகின்றனர். அத்தகைய தடைகளை எல்லாம் உடைத்தெறிந்து இந்தியா 7.8 சதவீத வளர்ச்சியை எட்டியுள்ளது.

உள்நாட்டு தயாரிப்புகளை ஆதரிப்பதன் மூலமும், சுயசார்பு பாரதத்தை முன்னெடுப்பதன் மூலமும் சுதந்திரத்தின் 100வது ஆண்டில் வளர்ந்த இந்தியாவை இளைஞர்களிடம் ஒப்படைக்க முடியும்' என்று கூறினார். முன்னதாக ஒன்றிய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் வெளியிட்டுள்ள அதிகாரப்பூர்வ தரவுகளின்படி, கடந்த நிதியாண்டின் முதல் காலாண்டில் ரூ.75.46 லட்சம் கோடியாக இருந்த நாட்டின் உண்மையான ஜிடிபி மதிப்பு, நடப்பு நிதியாண்டில் ரூ.81.36 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது. இது ரிசர்வ் வங்கி முன்னர் கணித்திருந்த 7 சதவீதத்தை விட மிக அதிகமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## புதினுடன் பிரதமர் மோடி சந்தித்து உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டுவர வலியுறுத்தல்!

சென்னை, 02 செப்டம்பர் 2026: கிர்கிஸ்தான் தலைநகர் பிஷ்கெக்கில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாட்டுக்கு இடையே, பிரதமர் நரேந்திர மோடி ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினை தனியாகச் சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

இந்தச் சந்திப்பின் போது, ரஷ்யாவிலிருந்து எரிபொருள் மற்றும் உரங்களை இறக்குமதி செய்வது குறித்து இரு தலைவர்களும் விவாதித்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும், பாதுகாப்பு மற்றும் முதலீடுகள் தொடர்பான விவகாரங்கள் குறித்தும் ஆலோசனை நடைபெற்றதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சந்திப்புக்குப் பிறகு, பிரதமர் நரேந்திர மோடி தனது எக்ஸ் பக்கத்தில், புதினுடனான பேச்சுவார்த்தை மிகவும் பயனுள்ளதாகவும் சிறப்பாகவும் அமைந்ததாகப் பதிவிட்டார்.

உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்றும், அமைதிக்கான வழிகளைக் கண்டறிய வேண்டும் என்றும் பிரதமர் மோடி, ரஷ்ய அதிபர் புதினிடம் வலியுறுத்தினார்.

உக்ரைன் போரைச் சுட்டிக்காட்டிப் பேசிய பிரதமர் மோடி,



“ஒவ்வொரு போரும் மனிதகுலத்தை பின்னோக்கித் தள்ளுகிறது. எனவே, போர்களை முடிவுக்கு கொண்டு வருவதற்கான வழிகளைக் கண்டறிய வேண்டும்” என்று வலியுறுத்தினார்.

மேலும், உக்ரைன் மோதலைத் தீர்ப்பதற்கான அனைத்து அமைதி முயற்சிகளுக்கும் இந்தியா முழு ஆதரவு அளிக்கும் என்றும் பிரதமர் மோடி தெரிவித்தார்.

தற்போதைய போர்க்களச் சூழலில் அப்பாவி பொதுமக்கள் பாதிக்கப்படக் கூடாது என்றும், மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இதனிடையே, சபாஹர் துறைமுகத் திட்டத்தின் வளர்ச்சியை விரிவுபடுத்துவது மற்றும் பிராந்திய இணைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் இரு தலைவர்களும் ஆலோசனை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹார்முஸ் ஜலசந்தியில் உள்ள லாரக் தீவில் ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல்: ஒரு மாத அமைதிக்குப் பிறகு மீண்டும் மோதல்; ஜோர்டான், யுஏஇ மீது பதில் தாக்குதலால் பீதி

சென்னை 02, செப்டம்பர் 2026: ஒரு மாத அமைதிக்குப் பிறகு ஹார்முஸ் ஜலசந்தியில் உள்ள லாரக் தீவில் ஈரானின் ராக்கெட் லாஞ்சர்களை குறிவைத்து அமெரிக்கா திடீர் தாக்குதல் நடத்தியது. இதனால் மேற்கு ஆசியாவில் மீண்டும் போர் பதற்றம் உருவாகி உள்ளது. அமெரிக்கா-ஈரான் இடையேயான போர் 6 மாதமாக நீடிக்கும் நிலையில் கடைசியாக கடந்த ஜூலை 29ம் தேதி ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியது. அதன் பிறகு பொருளாதார போர் தொடுப்பதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்ததைத் தொடர்ந்து கடந்த ஒரு மாதமாக இருதரப்பிலும் சண்டையின்றி மேற்கு ஆசியாவில் அமைதி நிலவியது. அதே சமயம், ஹார்முஸ் ஜலசந்தியில் ஈரான் தனது பிடியை இறுக்கியதால், எண்ணெய் கப்பல் போக்குவரத்து வெகுவாக பாதித்தது.

இந்த விவகாரத்தில் அமெரிக்கா பலமுறை மிரட்டியும் ஈரான் பணியவில்லை. இந்நிலையில், ஒரு மாத அமைதிக்குப் பிறகு நேற்று முன்தினம் இரவு திடீரென அமெரிக்க படைகள் ஹார்முஸ் ஜலசந்தியில் உள்ள லாரக் தீவில் தாக்குதல் நடத்தின. ஈரானின் ராக்கெட் லாஞ்சர் தளங்களை குறிவைத்து நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் 2 வீரர்கள் பலியானதாகவும், பலர் காயமடைந்ததாகவும் ஈரான் ராணுவம் தெரிவித்துள்ளது. ஈரானின் புரட்சிகர பாதுகாப்பு படையைச் சேர்ந்த வீரர்கள் ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் மீண்டும் கடல் கண்ணிவெடிகள் பொருத்தப்பட்ட ராக்கெட்டுகளை ஏவ தயாராகி வருவதால் இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக அமெரிக்க மத்திய கட்டளை பிரிவு செய்தித் தொடர்பாளர் டிம் ஹாக்கின்ஸ்



தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதலுக்கு பதிலடியாக ஜோர்டான் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள அமெரிக்க ராணுவ நிலைகளை குறிவைத்து ஈரான் டிரோன், ஏவுகணை தாக்குதல் நடத்தியது. 8 ஏவுகணைகளை இடைமறித்தாக ஜோர்டானும், 3 டிரோன்களை இடைமறித்ததாக ஐக்கிய அரபு அமீரகமும் தெரிவித்துள்ளன. அமெரிக்காவின் திடீர் தாக்குதலால் மேற்கு ஆசியாவில் மீண்டும் போர் பதற்றம் உருவாகி உள்ளது. ஜோர்டான் உள்ளிட்ட தங்களின் ராணுவ தளங்களில் ஈரான் தாக்குதல் நடத்தினால் அதற்கான பதிலடி கடுமையாக இருக்கும் என அதிபர் டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

### ஏஐ வீடியோ வெளியிட்ட டிரம்ப் சும்மா காமெடி பண்றார்: ஈரான்

ஈரானின் முக்கிய எண்ணெய் சேமிப்பகங்கள் இடம் பெற்றுள்ள கார்க் தீவை அமெரிக்கா வெகுவாக குறிவைத்து வருகிறது. இந்நிலையில், லாரக் தீவில் தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில், கார்க் தீவு பற்றி எரிவது போன்ற ஏஐ வீடியோவை அதிபர் டிரம்ப் சமூக ஊடக தளத்தில் பதிவிட்டார். அதில், கார்க் தீவு சின்னபின்னமாக சிதறடிக்கப்பட்டுள்ளது என்றும் டிரம்ப் குறிப்பிட்டார். இதனை ஈரான் மறுத்துள்ளது. டிரம்ப் சும்மா காமெடி பண்றார் என்றும் கார்க் தீவில் எந்த அசம்பாவிதமும் நடக்கவில்லை என்றும் தெரிவித்து உள்ளது.

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

புதன்,
செப்டம்பர் 02, 2026

## ஆலோசகர்கள் மற்றும் விநியோக பார்ட்னர்களின் டிஜிட்டல் திறன்களை மேம்படுத்த 'ஐசிஐசிஐ லைஃப் பார்ட்னர் ஸ்டாக் 2.08 தளத்தை அறிமுகப்படுத்துகிறது ஐசிஐசிஐ பிரூடென்ஷியல் லைஃப் இன்சூரன்ஸ்!

சென்னை 02, செப்டம்பர் 2026: ஐசிஐசிஐ பிருடென்ஷியல் லைஃப் இன்சூரன்ஸ், தனது 'பார்ட்னர் ஸ்டாக்' தளத்தை புதிய அம்சங்களுடன் 2026-இல் மேம்படுத்தி, 'ஐசிஐசிஐ லைஃப் பார்ட்னர் ஸ்டாக் 2.0' என்ற பெயரில் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத் தளம் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) சார்ந்த கருவிகள், வலுவான அமைப்புகளின் ஒருங்கிணைப்பு மற்றும் டிஜிட்டல் திறன்களை ஒன்றுதிரட்டி, விற்பனை, வாடிக்கையாளர் சேர்க்கை மற்றும் சேவைகளில் நிறுவனத்தின் ஆலோசகர்கள் மற்றும் விநியோக வலையமைப்பிற்குத் துணைபுரிகிறது.

ஆலோசகர்கள் மற்றும் விநியோகப் பங்காளர்கள் பொருத்தமான தீர்வுகளைக் கண்டறியவும், விலை மேற்கோள்களை உருவாக்கவும், வாடிக்கையாளர்களைச் சேர்க்கவும், அவர்களுக்கான சேவைகளை டிஜிட்டல் முறையில் வழங்கவும் வழிவகை செய்வதன் மூலம், வாடிக்கையாளர்களின் அனுபவத்தை எளிமையாக்கும் வகையில் இந்த மேம்பாடு வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் உள்ள 'eQuote App', வாடிக்கையாளர்களின் பிரிவு மற்றும் வாழ்க்கை நிலைக்கு ஏற்ப சரியான தயாரிப்புகளைப் பரிந்துரைக்க ஏஐ அடிப்படையிலான தயாரிப்புப் பரிந்துரைக் கருவியைப் பயன்படுத்துகிறது; அதோடு, தனிப்பயனாக்கப்பட்ட மேற்கோள்களை உருவாக்கிப் பகிரவும் ஆலோசகர்களுக்கு உதவுகிறது. 'LIVA' என்ற ஏஐ அடிப்படையிலான சாட்பாட், வாடிக்கையாளர்களுடன் உரையாடும்போதே தயாரிப்பு அம்சங்கள் மற்றும் மேற்கோள்களை ஆலோசகர்கள் எளிதாகப் பெற ஒரு உரையாடல் தளத்தை வழங்குகிறது.

'ஐசிஐசிஐ லைஃப் பார்ட்னர் ஸ்டாக் 2.0' குறித்து ஐசிஐசிஐ பிருடென்ஷியல் லைஃப் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் தலைமை விநியோக அதிகாரி (ஷீஃப் டிஸ்ட்ரிபியூஷன் ஆபீசர்) திரு. அமிஷ் பாங்கர் கூறுகையில், "வாடிக்கையாளர்கள் ஆயுள் காப்பீட்டுத் தீர்வுகளைப் புரிந்துகொள்ளவும் பெறவும் உதவுவதில் நமது ஆலோசகர்கள் மற்றும் விநியோகப் பங்காளர்கள் மிக முக்கியமான

ICICI PRUDENTIAL LIFE INSURANCE
Ke Saath Zimmedari Lagey Pyaari
Trusted by over 20 crore Indians in 25 YEARS

பங்காற்றுகின்றனர். பொருத்தமான தீர்வுகளைக் கண்டறிவது மற்றும் விலை மேற்கோள்களை உருவாக்குவது முதல் வாடிக்கையாளர்களைச் சேர்ப்பது மற்றும் அவர்களுக்கான சேவைகளை வழங்குவது வரை, அவர்களின் அன்றாட செயல்பாடுகளை எளிமையாகவும் வாடிக்கையாளர்களுக்கு உகந்ததாகவும் மாற்றக்கூடிய டிஜிட்டல் மற்றும் ஏஐ தொழில்நுட்பக் கருவிகளை வழங்குவதையே ஐசிஐசிஐ லைஃப் பார்ட்னர் ஸ்டாக் 2.0 நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தத் திறன்களைப் பங்காளர்களின் அமைப்புகளுடன் ஒருங்கிணைப்பதன் மூலம், செயல்பாடுகளை மேலும் வேகமாகவும் தடையற்றதாகவும் மாற்றுகிறோம்; இதனால் நமது பங்காளர்கள் வாடிக்கையாளர்களின் தேவைகளைப் புரிந்துகொண்டு சேவை செய்வதில் முழுமையாகக் கவனம் செலுத்த முடியும்."

'ஐசிஐசிஐ லைஃப் பார்ட்னர் ஸ்டாக் 2.0' தளமானது பங்காளர்களின் அமைப்புகளுடன் ஆழமான ஒருங்கிணைப்பைச் சாத்தியமாக்குகிறது. பங்காளர்களின் சிஆர்எம் தளங்களுடனான இதன் சுருங்கிணைப்பு, சிறந்த ஒத்திசைவுக்கும் (synchronisation) வாடிக்கையாளர் பயண நிர்வாகத்திற்கும் துணைபுரிகிறது. ஏபிஐ ஒருங்கிணைப்பு மூலமாக, பங்காளர்கள் தங்களது சொந்தத் தளங்களிலிருந்தே வாடிக்கையாளர் சேவைக்கான கோரிக்கைகளை எழுப்ப முடியும்; இக்கோரிக்கைகள் ஐசிஐசிஐ பிருடென்ஷியல் லைஃப் இன்சூரன்ஸ் நிறுவனத்தால் செயலாக்கப்பட்டு, அதன் தற்போதைய நிலை குறித்த புதுப்பிப்புகள் டிஜிட்டல் முறையில் பகிரப்படுகின்றன.

குழுப் பங்காளர்கள் (குரூப் பார்ட்னர்) உறுப்பினர்களின் விவரங்களை அனுப்பவும், உரிமைகோரல்களைப் (க்ளெய்ம்ஸ்) பதிவு செய்யவும், சேவைத் தேவைகளைப் பகிரவும் ஏபிஐ சேவைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

## ரஷ்ய ராணுவத்தில் சேர்ந்த 227 பேரில் உக்ரைன் போர்க்களத்தில் 51 இந்தியர்கள் மரணம்: எஞ்சியவர் குறித்து வெளியுறவு செயலர் விளக்கம்

சென்னை 02, செப்டம்பர் 2026: ரஷ்ய ராணுவத்தில் சேர்க்கப்பட்ட 227 இந்தியர்களில் இதுவரை 51 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 139 பேர் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் இந்திய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி அதிகாரப்பூர்வமாக தெரிவித்துள்ளார். ரஷ்யா - உக்ரைன் இடையே போர் சூழலில், ரஷ்யாவில் வேலை வாங்கி தருவதாக கூறி ஏமாற்றப்பட்டு அந்நாட்டில் கூலிப்படையினராகவும் உதவியாளர்களாகவும் ரஷ்ய ராணுவத்தில் சேர்க்கப்பட்ட இந்திய இளைஞர்களை மீட்க வேண்டும் என்ற கோரிக்கை நாடு முழுவதும் தொடர்ந்து வலுத்து வந்தது.



இந்த நிலையில் கிர்கிஸ்தான் தலைநகர் பிஷ்கெக்கில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டின் போது பிரதமர் மோடி, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினை நேரில் சந்தித்துப் பேசினார். அப்போது முடிவில்லா போரை உடனடியாக முடிவுக்கு கொண்டுவர வேண்டும் எனவும், அமைதி வழியிலான தீர்வே மனிதகுலத்தின் முன்னுரிமை என்றும் பிரதமர் மோடி அவரிடம் திட்டவட்டமாக வலியுறுத்தினார். இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி, 'ரஷ்ய ராணுவத்தில் 227 இந்தியர்கள் சேர்க்கப்பட்டதாக உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் உள்ளன.

இதில் துரதிர்ஷ்டவசமாக 51 இந்தியர்கள் உயிரிழந்துவிட்டனர். அதே சமயம் இதுவரை 139 பேர் ரஷ்ய படையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். எஞ்சிய இந்தியர்களையும் உடனடியாக விடுவித்து தாயகம் அழைத்து வருவது குறித்து மாஸ்கோவில் உள்ள நமது தூதரகம் மூலம் ரஷ்ய அரசுடன் பல்வேறு மட்டங்களில் தொடர் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது' என்று தெரிவித்தார்.

## மதுபான கண்ணாடி பாட்டில்களைத் திரும்பப் பெறும் முன்னோடித் திட்டம்: 46,000-க்கும் அதிக பரிவர்த்தனைகள்; திரும்ப வழங்கப்பட்ட தொகை ரூ.25 லட்சம்

சென்னை 02, செப்டம்பர் 2026: இந்த ஆண்டு தொடக்கத்தில் சென்னை மாநகரில், எழும்பூரில் உள்ள டாஸ்மாக் கடைகளில் கண்ணாடி பாட்டில்களைத் திரும்பப் பெறும் திட்டம் முன்னோடித்துவ அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் மேலும் இரண்டு இடங்களுக்கு இது விரிவுபடுத்தப்பட்டது. ஆகஸ்ட் 24, 2026 நிலவரப்படி, வாடிக்கையாளர்கள் கண்ணாடி பாட்டில்களைத் திரும்ப வழங்குவதற்கு ஏறக்குறைய 47,000 பரிவர்த்தனைகள் நடைபெற்றுள்ளன. மேலும், இதற்காக ரூ.25 லட்சத்திற்கும் அதிகமான தொகை டிஜிட்டல் பணம் செலுத்தல் முறையில் உடனடியாக வாடிக்கையாளர்களுக்கு திரும்ப வழங்கப்பட்டுள்ளதாக சமீபத்திய தரவுகள் தெரிவிக்கின்றன. க்யூஆர் குறியீடு அடிப்படையிலான இத்தகைய திட்டங்கள், இந்தியாவில் அதிக அளவில் மதுபான விற்பனை நடைபெறும் இடங்களில் காலியான கண்ணாடி பாட்டில்களைத் திரும்பப் பெறும் முறையில் ஒரு பெரிய மற்றும் ஆக்கப்பூர்வமான மாற்றத்தைக் கொண்டுவர முடியும் என்பதை இது தெளிவாக நிரூபிக்கிறது.

இத்திட்டத்தின் கீழ், க்யூஆர் குறியீடு ஒட்டப்பட்ட கண்ணாடி பாட்டில்களை வாங்கும்போது வாடிக்கையாளர்கள் ஒரு குறிப்பிட்ட தொகையை முன்பணமாகச் செலுத்துவார்கள். பின்னர், காலியான பாட்டிலை அதற்கான சிறப்பு கவுண்டரில் திருப்பித் தரும்போது, டிஜிட்டல் முறையில் அந்த முன்பணம் உடனடியாக அவர்களுக்குத் திருப்பியளிக்கப்படும். இவ்வாறு சேகரிக்கப்படும் பாட்டில்கள், டாஸ்மாக் அங்கீகரித்துள்ள பழைய பொருட்களை வாங்கும் வியாபாரிகளிடம் மறுசுழற்சிக்காக வழங்கப்படும். தமிழ்நாடு முழுவதும் இத்திட்டத்தை விரிவுபடுத்தி செயலாக்கம் செய்வதற்கு முன்பாக, இந்த நடைமுறை எவ்வாறு செயல்படுகிறது என்பதை பரிசோதித்து தடங்கல்களைக் களைவதே இந்த முன்னோடித் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

ஜூலை மாத தொடக்கத்துடன் ஒப்பிடுகையில், இத்திட்டத்தின் அனைத்துச் செயல்பாடுகளும் மிகப்பெரிய வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன. பாட்டில்களைத் திரும்பப் பெறும் பரிவர்த்தனைகள் கிட்டத்தட்ட 575% அதிகரித்துள்ளன. வழங்கப்



பட்ட டிஜிட்டல் முறையில் திரும்ப செலுத்தப்பட்ட பணம் நான்கு மடங்கிற்கும் மேல் உயர்ந்துள்ளது. மேலும், வெற்றிகரமாக ஸ்கேன் செய்யப்பட்ட க்யூஆர் பாட்டில்களின் எண்ணிக்கை 300%க்கும் மேல் வளர்ச்சியடைந்து 2.56 லட்சத்தை தாண்டியுள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்படும் கடைகளில் பாட்டில்களை வாடிக்கையாளர்கள் திரும்ப ஒப்படைக்கும் விகிதம் கணிசமாக உயர்ந்துள்ளது.

சென்னை எழும்பூரில் உள்ள ஆல்பர்ட் பாரில் (மதுபான விடுதியில்) சப்ளையராகப் பணிபுரியும் முரளி ரத்தினம் கூறுகையில், "வாடிக்கையாளர்கள் தாங்கள் பயன்படுத்திய மது பாட்டில்களைத் திரும்பக் கொடுத்து முன்பணத்தைப் பெறுவதற்காக டாஸ்மாக் கடையில் வைக்கப்பட்டிருந்த ஆர்விஎம் (பாட்டில்களைத் திரும்பப் பெறும் இயந்திரம்) இயந்திரத்தை நான் பார்த்தேன். அந்த இயந்திரம் பாட்டிலைச் சரிபார்த்து உறுதி செய்து ஏற்றுக்கொள்கிறது; பின்னர் அது நேரடியாக சேகரிப்புப் பைக்கு செல்கிறது. பாட்டிலைத் திரும்பக் கொடுத்தவுடன் வாடிக்கையாளருக்கு அவரது முன்பணம் உடனடியாக திரும்பக் கிடைத்துவிடுகிறது" என்றார்.

அதிக மது விற்பனை நடைபெறும் சில்லறை விற்பனை நிலையங்களில், பணியாளர்களைக் கொண்டு நேரடியாக கைப்பட காலி பாட்டில்களைச் சேகரிப்பதில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் உள்ள நிலையில், தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த பாட்டில் மறுசுழற்சி திட்டத்திற்கு இந்த முன்னோடித் திட்டம் ஒரு சிறந்த முன்மாதிரியாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்துவது குறித்து முடிவெடுப்பதற்கு முன்பாக, வரும் வாரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் அனைத்துக் கடைகளிலும் இதன் செயல்பாட்டை சிறப்பாக செயல்படும் கவுன்ட்டரின் செயல் திட்டத்திற்கு நிகரானதாக உயர்த்த தனி கவனம் செலுத்தப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## நேபாளத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1,003 ஆக உயர்வு!

சென்னை 02, செப்டம்பர் 2026: நேபாளத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1,003 ஆக உயர்ந்துள்ள நிலையில், 583 வெளிநாட்டினர் உள்பட சுமார் 4,000 பேர் இன்னும் மாயமாகியுள்ளனர். இதுவரை 12,000 பேர் மீட்கப்பட்டுள்ளனர். கடந்த ஆகஸ்ட் 26 அன்று நேபாள-திபெத் எல்லைப் பகுதியில் ஏற்பட்ட பனிப்பாறை சரிவு காரணமாக இந்த பேரழிவு ஏற்பட்டுள்ளதுடன், சித்வான், கிழக்கு மற்றும் மேற்கு நவால்பராசி, நுவாகோட் உள்ளிட்ட மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. நிலைமையின் தீவிரத்தைக் கருத்தில் கொண்டு, நுவாகோட், ராசுவா மற்றும் காத்மாண்டு உள்ளிட்ட பல மாவட்டங்களில் நதிகள் பெருக்கெடுத்து ஓடுவதால் புதிய



வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, 21,300-க்கும் மேற்பட்ட பாதுகாப்புப் படையினர் தீவிர மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளதுடன், நீர்மட்டத்தை கண்காணிக்க ராசுவாவில் நேரலை கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

மேலும், வெள்ளத்தால் முக்கிய பாலங்களும் சாலைகளும் அடித்துச் செல்லப்பட்டதால், காத்மாண்டுவை இணைக்கும் நெடுஞ்சாலைகளில் மாற்று வழிகள் மற்றும் ஒருவழிப் போக்குவரத்து விதிகள் அமல்படுத்தப்பட்டு வருகின்றன.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## நீர் பாதுகாப்பு குறித்த துறைசார் உச்சி மாநாட்டின் நிறைவு அமர்வு – பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்கிறார்



சென்னை, 02 செப்டம்பர் 2026: பிரதமர் திரு நரேந்திர மோடி, நாளை (2026 செப்டம்பர் 2), புது தில்லியில் உள்ள சுஷ்மா ஸ்வராஜ் பவனில், மாலை சுமார் 4:30 மணியளவில் நடைபெறும் ஜல் சக்தி அமைச்சகத்தின் துறை சார் உச்சிமாநாட்டின் நிறைவு அமர்வில் பங்கேற்று உரையாற்றவுள்ளார்.

2026 செப்டம்பர் 1, 2 தேதிகளில் நடைபெறும் இந்த இரண்டு நாள் துறைசார் உச்சிமாநாடு, மத்திய - மாநில அரசுகளுக்கு இடையேயான நெருங்கிய ஒத்துழைப்பின் மூலம் இந்திய ஒற்றுமை உணர்வை வலுப்படுத்தவும், கூட்டுறவு கூட்டாட்சியை ஆழப்படுத்தவும், தேசிய முன்னுரிமைகளின் மீதான கூட்டு உறுதியை வளர்க்கவும் பிரதமரால் திட்டமிடப்பட்ட துறைசார் உச்சிமாநாடுகளின் வரிசையில் இது முதலாவதாகும். இந்த முன்முயற்சியானது, முக்கியத் துறைசார் முன்னுரிமைகள் குறித்து கூட்டாக விவாதிப்பதற்கும், அவற்றின் செயலாக்கத்தை விரைவுபடுத்துவதற்கும் ஒரு கட்டமைக்கப்பட்ட தளத்தை வழங்குகிறது.

இந்த உச்சிமாநாடு, மத்திய - மாநில அரசுகளின் தலைவர்களையும், மூத்த அதிகாரிகளையும் ஒன்றிணைத்து, முக்கிய முன்னுரிமைகள் குறித்து விவாதிக்கவும், சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்ளவும், செயலாக்கச் சவால்களுக்குத் தீர்வு காணவும், காலவரையறைக்குட்பட்ட செயல் திட்டங்களை வகுக்கவும் வழிவகுக்கும். இந்த முன்முயற்சி, தேசிய இலக்குகளுக்கான கூட்டுப் பொறுப்பை ஊக்குவிப்பதையும், இந்த விவாதங்கள் ஆளுகையிலும் சேவை வழங்குதலிலும் மேம்பாடுகளாக மாறுவதை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த உச்சிமாநாடு நான்கு முக்கிய அம்சங்களில் கவனம் செலுத்தும்:

* நீர் உள்கட்டமைப்பு திட்டங்களை உரிய நேரத்தில் செயல்படுத்துதல்

* மழை நீர் சேகரிப்பு

* குடிநீர் அமைப்புகளின் நிலைத்தன்மை

* ஜல் ஜீவன் இயக்கத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் கிராமப்புற குடிநீர் வழங்கல் திட்டங்களின் செயல்பாடு

இந்த ஆலோசனைகளின் விளைவாக, நீர் உள்கட்டமைப்புத் திட்டங்களை விரைவுபடுத்துதல், நீர் சேமிப்பில் பொதுமக்களின் பங்கேற்பை மேம்படுத்துதல், நிலையான குடிநீர் ஆதாரங்களை உறுதி செய்தல், கிராமப்புற குடிநீர் சேவைகளை மேம்படுத்துதல் ஆகிய வற்றுக்கான உறுதியான, காலவரையறைக்குட்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சத்ரபதி சிவாஜி படத்திற்கு இணையாக வைத்ததால் மோடி போட்டோவை அகற்றிய ராஜ் தாக்கரே மகன் மீது வழக்கு: புனே அரசு கல்லூரியில் பெரும் பரபரப்பு





சென்னை, 02 செப்டம்பர் 2026: புனே அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் பிரதமர் மோடியின் புகைப்படத்தை அகற்றியதாக மகாராஷ்டிரா நவநிர்மான் சேனா தலைவர் ராஜ் தாக்கரேயின் மகன் அமித் தாக்கரே மீது போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். மகாராஷ்டிரா நவநிர்மான் சேனா கட்சியின் தலைவர் ராஜ் தாக்கரேயின் மகன் அமித் தாக்கரே, மாணவர் சந்திப்பு நிகழ்ச்சிக்காக புனேயில் உள்ள அரசு பாலிடெக்னிக் கல்லூரிக்கு வருகை தந்தார். அப்போது, கல்லூரியின் சுவரில் சத்ரபதி சிவாஜி மகாராஜின் ஞருவப் படத்திற்கு அருகிலேயே பிரதமர் மோடியின் புகைப்படம் மாட்டப்பட்டிருந்ததை அவரது ஆதரவாளர்கள் சுட்டிக் காட்டினர்.

சத்ரபதி சிவாஜி படத்திற்கு இணையாக பிரதமரின் படம் வைக்கப்பட்டதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த அமித் தாக்கரே, அந்த படத்தை உடனடியாக அகற்றும்படி கூறினார். இதையடுத்து, அவரது ஆதரவாளர்கள் அங்கிருந்த பிரதமர் மோடியின் புகைப்படத்தை சுவரில் இருந்து அகற்றினர். இச்சம்பவம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து, பின்னர் அந்த புகைப்படம் மீண்டும் அதே இடத்தில் மாட்டப்பட்டது. இந்த விவகாரம் தொடர்பாக சதுஷ்ரிங்கி போலீசார், அத்துமீறி நுழைதல் மற்றும் சட்டவிரோதமாக கூடுதல் உள்ளிட்ட சட்டப்பிரிவுகளின் கீழ் அமித் தாக்கரே மற்றும் அவருடன் இருந்த 20 முதல் 25 பேர் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையே இந்த சம்பவத்திற்கு பாஜக கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இதற்கு பதிலளித்த அமித் தாக்கரே, 'என் மீது பதிவான முதல் வழக்கே சிவாஜி தொடர்பான விவகாரத்தில்தான். தற்போது மீண்டும் சிவாஜிக்காக என் மீது 2வது வழக்குப் பதிவு செய்யப்பட்டால் அதை மகிழ்ச்சியோடு ஏற்பேன்' என்று தெரிவித்தார்.

## தடைகளை எல்லாம் உடைத்தெறிந்து நாட்டின் பொருளாதார வளர்ச்சி 7.8% ஆக உயர்வு: பிரதமர் மோடி பெருமிதம்

சென்னை, 02 செப்டம்பர் 2026: நாட்டின் ஒட்டுமொத்த கூட்டு வலிமையால் நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் பொருளாதார வளர்ச்சி 7.8 சதவீதமாக உயர்ந்து சாதனை படைத்துள்ளதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். உலகம் முழுவதும் போர் பதற்றங்கள், சர்வதேச நெருக்கடிகள் மற்றும் வர்த்தக விநியோகச் சங்கிலி பாதிப்புகளால் உலக நாடுகள் பொருளாதார ரீதியாக பெரும் சவால்களை சந்தித்து வந்தன. இந்த இக்கட்டான சூழ்நிலைகளுக்கு மத்தியிலும், நடப்பு 2026-27ம் நிதியாண்டின் ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான முதல் காலாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) 7.8 சதவீதமாக அபார வளர்ச்சி அடைந்துள்ளது.

இது தொடர்பாக பிரதமர் மோடி வெளியிட்ட வீடியோ பதிவில், '7.8 சதவீத பொருளாதார வளர்ச்சி விகிதம் நாடு முழுவதும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. நாட்டு மக்களின் அசைக்க முடியாத உறுதிக்கும், உழைப்பிற்கும் கிடைத்த இந்த வெற்றி நமது கூட்டு வலிமையை வெளிப்படுத்துகிறது. 2020ம் ஆண்டு கொரோனா காலத்திற்குப் பிறகு உலகெங்கும் பொருளாதார ஸ்திரத்தன்மை கேள்விக்குறியாகியுள்ள நிலையில், இந்தியாவிற்குள் சிலர் அவநம்பிக்கையை விதைத்து தொடர் பொய்களைப் பரப்பி வருகின்றனர். அத்தகைய தடைகளை எல்லாம் உடைத்தெறிந்து இந்தியா 7.8 சதவீத வளர்ச்சியை எட்டியுள்ளது.

உள்நாட்டு தயாரிப்புகளை ஆதரிப்பதன் மூலமும், சுயசார்பு பாரதத்தை முன்னெடுப்பதன் மூலமும் சுதந்திரத்தின் 100வது ஆண்டில் வளர்ந்த இந்தியாவை இளைஞர்களிடம் ஒப்படைக்க முடியும்' என்று கூறினார். முன்னதாக ஒன்றிய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் வெளியிட்டுள்ள அதிகாரப்பூர்வ தரவுகளின்படி, கடந்த நிதியாண்டின் முதல் காலாண்டில் ரூ.75.46 லட்சம் கோடியாக இருந்த நாட்டின் உண்மையான ஜிடிபி மதிப்பு, நடப்பு நிதியாண்டில் ரூ.81.36 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது. இது ரிசர்வ் வங்கி முன்னர் கணித்திருந்த 7 சதவீதத்தை விட மிக அதிகமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## செப்டம்பர் 15 முதல் சர்க்கரை வியாபாரிகளுக்கான இருப்பு வரம்பு 2,000 குவிண்டாலாக குறைப்பு - பதுக்கலைத் தடுத்து, விலை உயர்வைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை



சென்னை, 02 செப்டம்பர் 2026: உள்நாட்டுச் சந்தையில் போதுமான சர்க்கரை இருப்பை உறுதி செய்வதற்கும், சர்க்கரைப் பதுக்கலையும் ஊக வணிகத்தையும் தடுப்பதற்கும், மத்திய அரசு, சர்க்கரை வியாபாரிகளுக்கான கையிருப்பு வரம்பை 4,000 குவிண்டாலிலிருந்து 2,000 குவிண்டாலாக, 2026 செப்டம்பர் 15 முதல் குறைத்துள்ளது. இது 2026 நவம்பர் 30 வரை நடைமுறையில் இருக்கும். தற்போது, நாடு முழுவதும் உள்ள சர்க்கரை வியாபாரிகளுக்கு, 4,000 குவிண்டால் கையிருப்பு வரம்பு 2026 ஆகஸ்ட் 1 முதல் அமலில் உள்ளது. இந்தக் கையிருப்பு வரம்பை மேலும் குறைத்து 2,000 குவிண்டாலாக நிர்ணயித்து அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

திருத்தப்பட்ட விதிகளின்படி, 2026 செப்டம்பர் 15 முதல் அமலுக்கு வரும் வகையில், சர்க்கரை வியாபாரிகள் பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும்:

* பொருட்களைப் பெற்ற நாளிலிருந்து 30 நாட்களுக்கு மேல் எந்த பொருட்களையும் வைத்திருக்கக் கூடாது.

* நாடு முழுவதும் எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் 2,000 குவிண்டாலுக்கு மிகுதியாக சர்க்கரையை இருப்பு வைத்திருக்கக் கூடாது.

* இருப்பினும், குறிப்பிட்ட சந்தைத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, கொல்கத்தா, அதன் விரிவாக்கப் பட்ட மாநகரப் பகுதிகளுக்கான கையிருப்பு வரம்பு 4,000 குவிண்டாலாகவே நீடிக்கும்.

* கொல்கத்தா பகுதியானது உத்தரப் பிரதேசம், மகாராஷ்டிராவிலிருந்து சர்க்கரையைப் பெற்று, வடகிழக்குப் பகுதி உட்பட நாட்டின் கிழக்குப் பகுதிக்கு விநியோகம் செய்கிறது. எனவே, கொல்கத்தாவிலும் அதன் விரிவாக்கப் பட்ட மாநகரப் பகுதிகளுக்கும் தற்போதுள்ள 4,000 குவிண்டால் வரம்பு அப்படியே நீட்டிக்கப்பட்டுள்ளது.

* இந்த நடவடிக்கை, பதுக்கலை கட்டுப்படுத்துவதையும், ஊக வணிகத்தை தடுப்பதையும், சர்க்கரை கையிருப்பு அதிகளவில் குவிவதைத் தடுப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இது விநியோகக் கட்டமைப்பு முழுவதும் சர்க்கரையின் சீரான விநியோகத்திற்கு வழி வகுப்பதோடு, நுகர்வோருக்கு நியாயமான விலையில் அது தொடர்ந்து கிடைப்பதை உறுதி செய்யும்.

தீவிரக் கண்காணிப்பும் சரிபார்ப்பும் :

அரசு, நாடு முழுவதும் உள்ள சர்க்கரை ஆலைகள், முகவர்கள், வர்த்தகர்களை உள்ளடக்கி, சர்க்கரை இருப்புகளைத் தீவிரமாகக் கண்காணித்து, சரிபார்த்து வருகிறது. இந்த நடவடிக்கை, அதிகப்படியான இருப்பு வைத்திருத்தல், தகவல்களை வெளியிடாமல் இருத்தல் சர்க்கரை இருப்பு, விற்பனை ஆகியவற்றில் உள்ள முறைகேடுகளைக் கண்டறிய உதவியுள்ளது.

இந்த நடவடிக்கைகளின் விளைவாக, சமீபத்திய நாட்களில் ஆலை சர்க்கரையின் விலை சுமார் 20% குறைந்துள்ளது. சில்லறை விலைகளும் குறையத் தொடங்கியுள்ளன. ஆலை விலைக் குறைப்பைப் பின்பற்றி மேலும் விலை குறையும் என எதிர்பார்க்கப் படுகிறது. உள்நாட்டுச் சந்தையில் சர்க்கரையின் போதுமான இருப்பு, சீரான விநியோகம், விலை நிலைத்தன்மை ஆகியவற்றைப் பேணுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது.

## கடத்தலில் ஈடுபட்ட விமான நிறுவனத்தின் தூய்மைப் பணியாளர்கள் இரண்டு பேரை சென்னை விமான நிலைய சுங்கத்துறை அதிகாரிகள் கைது செய்தனர்




சென்னை, 02 செப்டம்பர் 2026: உளவுத் தகவலின் அடிப்படையில், 2026 ஆகஸ்ட் 30 அன்று துபாயிலிருந்து சென்னை சர்வதேச விமான நிலையத்திற்கு வந்த விமானத்தில் பணியில் இருந்த இரண்டு தூய்மைப் பணியாளர்களைச் சென்னை சுங்கத்துறையின் அதிகாரிகள் தடுத்து சோதனை மேற்கொண்டனர். அப்போது ஒவ்வொரு பணியாளரின் காலணிகளுக்குள்ளும் பொட்டலம் ஒன்று மறைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டறியப்பட்டது.

அவற்றை ஆய்வு செய்தும், உருக்கியும், பதப்படுத்தியும் பார்த்ததில், கைப்பற்றப்பட்ட அப்பொருளிலிருந்து 1,640 கிராம் எடையுள்ள தங்கக் கட்டிகள் கிடைத்தன. அரசு அங்கீகாரம் பெற்ற தங்கத் தரப் பரிசோதகர் அந்த தங்கக் கட்டிகள் 24 காரட் ஆனவை என்றும், அவற்றின் மதிப்பு ரூ. 2,37,39,000 என்றும் சான்றளித்தார். இதையடுத்து கடத்தப்பட்ட அப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும், சுங்கச் சட்டம் 1962-ன் கீழ் சம்பந்தப்பட்ட இருவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டனர். இது குறித்த விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

தங்கள் உடலிலோ அல்லது உடைமைகளிலோ தங்கம் அல்லது பிற தடைசெய்யப்பட்ட பொருட்களை மறைத்து வைத்து கடத்துவதைத் தவிர்க்குமாறு பொதுமக்களுக்கும் விமான நிலையப் பணியாளர்களுக்கும் சென்னை சுங்கத்துறை கடுமையாக அறிவுறுத்துகிறது. இத்தகைய செயல்கள் சுங்கச் சட்டத்தின் கீழ் கடுமையான குற்றங்களாகும். இவை கடுமையான தண்டனை நடவடிக்கைகளுக்கும், நீண்ட கால சட்ட விளைவுகளுக்கும் வழிவகுக்கும் என்று தெரிவித்துள்ளது.

# போன் ஹாங் ஆவதைத் தடுக்க கூகுள் அதிரடி நடவடிக்கையாக ஆண்ட்ராய்டு ஆப்களுக்கு புதிய கட்டுப்பாடு!



சென்னை, 02 செப்டம்பர் 2026: ஸ்மார்ட்போன் பயன்படுத்தும் பெரும்பாலான பயனர்கள் சந்திக்கும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று போன் அடிக்கடி “ஹாங்” ஆவது. குறிப்பாக, போனில் போதுமான ரேம் இல்லாத போது ஒரே நேரத்தில் பல செயலிகளைப் பயன்படுத்துவது, அதிக மெமரியை எடுத்துக் கொள்ளும் ஆப்களை இயக்குவது போன்ற காரணங்களால் ஸ்மார்ட்போனின் செயல்திறன் பாதிக்கப்படலாம்.

இதற்கிடையே, உலகளவில் ரேம் சிப்களின் விலை அதிகரித்து வருவதுடன், நவீன ஸ்மார்ட்போன்களில் இடம்பெறும் கிமி வசதிகள் அதிக அளவிலான மெமரியைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளன. இதனால், ஆண்ட்ராய்டு செயலிகள் தேவையற்ற வகையில் அதிக ரேமை பயன்படுத்துவதைத் தடுக்கும் வகையில் கூகுள் புதிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

புதிய அணுகுமுறையின் முக்கிய நோக்கம், செயலிகள் குறைந்த அளவிலான மெமரியைப் பயன்படுத்தும் வகையில் அவற்றை மேம்படுத்துவதும், குறைந்த ரேம் கொண்ட ஸ்மார்ட்போன்களிலும் அவை சீராக இயங்குவதை உறுதி செய்வதுமாகும்.

இதன்படி, ஆப் டெவலப்பர்கள் தங்களது செயலிகளின் குறியீடு மற்றும் மெமரி பயன்பாட்டை மேம்படுத்த வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. குறிப்பாக, செயலியின் தேவையற்ற குறியீடுகளை நீக்குதல், மெமரி பயன்பாட்டை கட்டுப்படுத்துதல் மற்றும் செயல்திறனை மேம்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

மேலும், அதிக அளவிலான மெமரியை பயன்படுத்தும் பெரிய செயலிகள் மற்றும் அதிக கிராபிக்ஸ் கொண்ட கேம்கள் மீது கூடுதல் கவனம் செலுத்தப்படுகிறது. கிமி அம்சங்கள், உயர்தர கிராபிக்ஸ், பின்னணியில் தொடர்ந்து இயங்கும் சேவைகள் மற்றும் நிகழ்நேர தரவு செயலாக்கம் போன்றவை ஆப்கள் அதிக ரேமை பயன்படுத்துவதற்கான முக்கிய காரணங்களாக உள்ளன.

இதனால், எதிர்கால ஆண்ட்ராய்டு பதிப்புகளில் குறிப்பாக அதிக மெமரியை பயன்படுத்தும் செயலிகள் மீது கூகுள் கடுமையான செயல்திறன் வியீமுறைகளை அமல்படுத்தக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. விதிமுறைகளை பின்பற்றாத அல்லது தேவைக்கு அதிகமாக மெமரியை பயன்படுத்தும் செயலிகளுக்கு கூகுள் ப்ளே ஸ்டோர் விநியோகத்தில் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் வாய்ப்பும் இருப்பதாக கூறப்படுகிறது.

குறிப்பாக, வரவிருக்கும் ஆண்ட்ராய்டு பதிப்புகளில் செயலிகளின் மெமரி பயன்பாடு மற்றும் செயல்திறன் தொடர்பான கட்டுப்பாடுகள் மேலும் தீவிரப்படுத்தப்படலாம். இதன் மூலம், குறைந்த ரேம் கொண்ட போன்களிலும் ஆப்கள் சீராக இயங்குவதை உறுதி செய்ய கூகுள் முயற்சி மேற்கொண்டு வருகிறது.

இந்த மாற்றங்கள் பயனர்களுக்கு சாதகமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆப்கள் குறைந்த அளவு ரேமை பயன்படுத்தினால், ஒரே நேரத்தில் பல செயலிகளை இயக்கும்போதும் ஸ்மார்ட்போன் செயல்திறன் மேம்படலாம். இதன் மூலம் போன் ஹாங் ஆவது, ஆப்கள் திடீரென முடங்குவது மற்றும் பின்னணி செயலிகளால் ஏற்படும் அதிக மெமரி பயன்பாடு போன்ற பிரச்சினைகள் குறைய வாய்ப்புள்ளது.

அதே நேரத்தில், மெமரி பயன்பாடு குறைவதால் பேட்டரி பயன்பாடும் ஓரளவு கட்டுப்படுத்தப்படலாம். குறிப்பாக குறைந்த மற்றும் நடுத்தர விலை ஸ்மார்ட்போன்களில் இந்த மாற்றம் பயனர்களுக்கு முக்கியமானதாக இருக்கலாம்.

ஏஐ தொழில்நுட்பம் வேகமாக வளர்ந்து வரும் நிலையில், ஸ்மார்ட்போன் செயலிகளும் தொடர்ந்து அதிக திறன்களைப் பெறுகின்றன. இதனால் மெமரி தேவையும் அதிகரித்து வருகிறது. இந்த சூழலில், செயலிகள் தேவையற்ற வகையில் அதிக ரேமை பயன்படுத்துவதைத் தடுப்பது எதிர்கால ஆண்ட்ராய்டு சூழலில் முக்கியமான மாற்றமாக இருக்கக்கூடும்.

மொத்தத்தில், ஸ்மார்ட்போன்களின் செயல்திறனை மேம்படுத்தவும், குறைந்த ரேம் கொண்ட சாதனங்களிலும் ஆப்கள் சிறப்பாக இயங்கவும் கூகுளின் இந்த நடவடிக்கைகள் உதவக்கூடும். ஆனால், ரேம் பயன்பாட்டைக் குறைப்பது தொடர்பான குறிப்பிட்ட சதவீத இலக்குகள் மற்றும் நிஷீஷீரீறீமீ றிறீணீஹ் ஷிமீஷீகூஷீமீ-ல் விதிக்கப்படும் தண்டனைகள் குறித்து கூகுள் வெளியிடும் அதிகாரப்பூர்வ தகவல்களே உறுதிப்படுத்தலாக இருக்கும்.

# தலைமைசெயலக குடியிருப்பு பகுதியில் மனைவியின் அக்காவை பணம் கேட்டு கையால் தாக்கி கத்தியை காட்டி மிரட்டியவர் கைது



சென்னை 02, செப்டம்பர் 2026: சென்னை, ஓட்டேரி, சூளைமேடு தெருவில் கலைவாணி, பெ.வ/32 க/பெ.கார்த்திக்ராஜா என்பவர் தனது அம்மா மற்றும் மகனுடன் வசித்து வருவதாகவும், இவரது தங்கை காயத்ரியின் கணவர் விஷ்வா என்பவர் அடிக்கடி கலைவாணியிடம் வீண்தகராறு செய்வதாகவும், இந் நிலையில் கடந்த 30.08.2026 அன்று இரவு விஷ்வா காயத்ரியின் செல்போனிலிருந்து கலைவாணியை தொடர்பு கொண்டு தனக்கு ஆட்டோ வாங்க லோன் போட்டு பணம் தருமாறு கேட்டபோது, கலைவாணி ஏற்கனவே எனது அம்மாவிடமிருந்து 50,000/- ரூபாய் வாங்கி சென்று ஆட்டோவுக்கான பணம் கட்டாமல் ஏமாற்றிவிட்டதால் லோன் போட்டு பணம் தரமுடியாது என கூறியதாகவும், உடனே விஷ்வா தகாத வார்த்தைகளால் பேசி இணைப்பை துண்டித்து, அன்றைய தினம் (30.08.2026) இரவு கலைவாணியின் வீட்டிற்கு சென்று, கலைவாணியை தகாத வார்த்தைகளால் பேசி கட்டையால் தாக்கி, கத்தியை காட்டி கொலை மிரட்டல் விடுத்து சென்றதாகவும், மேற்படி தகாத வார்த்தைகளால் பேசி கட்டையால் தாக்கி கத்தியை காட்டி கொலை மிரட்டல் விடுத்த தங்கை கணவர் விஷ்வா என்பவர் மீது நடவடிக்கை எடுக்குமாறும், பாதிக்கப்பட்ட கலைவாணி ஜி-5 தலைமை செயலக குடியிருப்பு காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின்பேரில், பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் (பிஎன்எஸ் ஆக்ட்) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் (திஎன்பிஹெச்டபிள்யு ஆக்ட்) உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

ஜி-5 தலைமை செயலக குடியிருப்பு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி விஷ்வா, வ/21, பிரிக்ளின் ரோடு, புரசைவாக்கம், சென்னை என்பவரை நேற்று முன்தினம் (31.08.2026) கைது செய்தனர். அவரிடமிருந்து குற்றச்செயலுக்கு பயன்படுத்திய கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி விஷ்வா மீது ஏற்கனவே 2 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி விஷ்வா விசாரணைக்குப் பின்னர் நேற்று முன்தினம் (31.08.2026) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

# சிந்தாதிரிப்பேட்டை பகுதியில் 30 கிலோ கஞ்சா வைத்திருந்த வழக்கில் முக்கிய தலைமறைவு எதிரி திரிபுரா மாநிலத்தில் கைது



சென்னை 02, செப்டம்பர் 2026: சென்னை பெருநகர காவல் ஆணையாளர் முனைவர்.கி.அமல்ராஜ் இ.கா.ப., அவர்களின் உத்தரவின்பேரில் சென்னை பெருநகரில் போதைப் பொருட்களுக்கு எதிரான நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டு 12 காவல் மாவட்டங்களில் காவல் துணை ஆணையாளர்கள் மேற்பார்வையில், உதவி ஆணையாளர்கள் மற்றும் ஆய்வாளர்கள் கொண்ட தனிப்படையினர் தொடர்ந்து கண்காணித்து, போதைப் பொருட்களை வைத்திருப்பவர்கள், கடத்தி வருபவர்கள், பதுக்கி வைத்து விற்பனை செய்பவர்களை கைது செய்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக, 11.06.2026 அன்று இரவு எஃப்-1 சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர், சிந்தாதிரிப்பேட்டை, மே தின பூங்கா அருகே கண்காணித்து, அங்கு சட்டவிரோத விற்பனைக்காக கஞ்சா வைத்திருந்த எதிரி ஆகாஷ் தாஸ், வ/23, ராம்தாகூர் பள்ளி, அகர்தலா, மேற்கு திரிபுரா மாநிலம் என்பவரை கைது செய்து, 30 கிலோ கஞ்சா மற்றும் செல்போன் பறிமுதல் செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார்.

மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய முக்கிய தலைமறைவு எதிரி திரிபுராவில் பதுங்கியிருப்பதன் பேரில், எஃப்-1 சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலைய காவல் குழுவினர் காவல் உயரதிகாரிகள் உத்தரவுப் பெற்று திரிபுரா மாநிலம் சென்று முகாமிட்டு, அம்மாநில போலீசார் உதவியுடன் தீவிர விசாரணை மற்றும் தேடுதலில் ஈடுபட்டு, இவ்வழக்கில் தொடர்புடைய முக்கிய தலை மறைவு எதிரி சாகர்சில், வ/26. பிஷால்கார், மேற்கு திரிபுரா என்பவரை 28.08.2026 அன்று கைது செய்து, திரிபுரா மாநிலம், பிஷால்கார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி உரிய சட்ட நடவடிக்கைகளுடன் எதிரி சாகர்சில் சென்னைக்கு அழைத்து வரப் பட்டார்.

விசாரணையில் எதிரி சாகர்சில் திரிபுரா மாநிலத்திலிருந்து கஞ்சாவை ஆட்கள் மூலம் சென்னைக்கு அனுப்பி சட்டவிரோத விற்பனை செய்து வந்தது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரி சாகர்சில் விசாரணைக்குப் பின்னர் நேற்று (01,06,2026) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப் பட்டார்.

# ஆயுதப்படை மருத்துவச் சேவைகளின் தலைமை இயக்குநராக ஏர் மார்ஷல் சந்தீப் தரேஜா பொறுப்பேற்றுக்கொண்டார்

சென்னை, 02 செப்டம்பர் 2026: ஆயுதப்படை மருத்துவச் சேவைகளின் 47-வது தலைமை இயக்குநராக ஏர் மார்ஷல் சந்தீப் தரேஜா 2026 செப்டம்பர் 1 அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். அவர் பாதுகாப்புப் படையினருக்கு விரிவான மருத்துவச் சேவைகள் வழங்கப்படுவதை மேற்பார்வையிடுவார். செயல்பாட்டு ரீதியான மருத்துவ தயார் நிலை, கூட்டுச் செயல்பாடு, ராணுவ சுகாதாரச் சேவையின் ரூவீனமயமாக்கல், டிஜிட்டல் சுகாதாரம், மருத்துவ ஆராய்ச்சி, புதுமைக் கண்டுபிடிப்பு, மனித வள மேம்பாடு, தற்போது பணியில் உள்ளவர்கள், முன்னாள் ராணுவத்தினர், அவர்களது குடும்பத்தினர் ஆகியோருக்கு உயர்தர சுகாதாரச் சேவைகளை வழங்குதல் ஆகியவற்றில் தொடர்ந்து கவனம் செலுத்தப்பட்டு வரும் சூழலில் ஆயுதப்படை மருத்துவச் சேவைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் ஒரு பகுதியாக அவருடைய நியமனம் அமைந்துள்ளது. புனேயில் உள்ள ஆயுதப் படை மருத்துவக் கல்லூரியின் முன்னாள் மாணவரான ஏர் மார்ஷல் தரேஜா 1986-ம் ஆண்டு டிசம்ப ரில் ராணுவ மருத்துவப் படையில் அதிகாரியாக நியமிக்கப்பட்டார். சிறந்த மருத்துவராகவும், இரைப்பை குடல் மருத்துவ நிபுணராகவும் உள்ள அவர், தில்லியில் மருத்துவத்தில் எம்டி பட்டத்தையும், புது தில்லி எய்ம்ஸில் இரைப்பை குடல் மருத்துவத்தில் டிஎம் பட்டத்தையும் பெற்றுள்ளார். கொவிட்-19 பெருந் தொற்று காலத்தில் தில்லி கண்டோன்மென்ட் மருத்துவமனையில் அவர் பணியாற்றிய போது சிக்கல்மிக்க சுகாதார, நிர்வாகச் சவால்களைச் சிறப்பாகக் கையாண்டார்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்